# கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் மாபெரும் ஜல்லிக்கட்டு விழா!













மதுரை வடக்கு மாவட்டம் மேற்கு தொகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அலங்காநல்லூர் அருகே கீழக்கரையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கில் நடைபெற்ற மாபெரும் ஜல்லிக்கட்டு விழாவினை உறுதிமொழி ஏற்புக்கு பின் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி மூர்த்தி கொடியசைத்து துவக்கி வைத்தார் சுமார் 1300 காளைகள் 500 மாடு பிடி வீரர்கள் பங்கேற்றார்கள் காளைகளுக்கு மாடுபிடி வீரர்களுக்கும் தங்க காசு, சைக்கிள், டிவி உள்ளிட்ட விலை உயர்ந்த பரிசு பொருட்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, வெங்கடேசன் எம்.எல்.ஏ., ஆர்.டி.ஓ. ஷாலினி, நடிகர் விமல், தனச்செல்வம், ஜி.பி.ராஜா, திலீப் ராஜ கண்ணப்பன் , எம்.ஆர்.எம். பால சுப்பிரமணியன் மூவேந்திரன், ஆசை கண்ணன், வக்கீல் பாலாஜி, சிறைச்செல்வன் பொதும்பு தனசேகர், ஆர்.கே.ஜெயராமன், தன்ராஜ் அன்பழகன், காவேரி, எஸ்.வி.சுதன், மதி வெங்கடேஷ், தவமணி, சசிகுமார், யூனியன் சேர்மன் வீராகவன், மற்றும் பலர் குடும்பத்துடன் பங்கேற்றனர் .






விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரியில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுயஉதவிக் குழுக்களை சேர்ந்த 10,559 நபர்களுக்கு ரூ .87.37 கோடி கடனுதவி மற்றும் இணை மானியத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் , தலைமையில் , விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் , நிதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார் .





விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழா மற்றும் கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் ஒலக்கூரில் நடைபெற்றது. கூட்டத்தில் தலைமை கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். அப்போது தி.மு.க. நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்ற 500க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உள்ளிட்டோர் தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்ற உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், தலைமை தீர்மான குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன், மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.